بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 15/01/2021 அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝٦ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝٧

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றி நற்குறிப்பு நடைபெற்று வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: தங்களுக்கு என்மீது அன்பு உள்ளதா? என்று ஒரு முறை ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆம் என்று பதிலளித்தார்கள். தங்களுக்கு அல்லாஹ்வின் மீதும் நேசம் உள்ளதா? என்று ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் மீண்டும் கேட்டார்கள். ஆம் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அவ்வாறென்றால் ஒரு வகையில் தாங்கள் ஷிர்க் செய்து விட்டீர்கள் என்று ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வுடன் அவனது அன்பில் வேறொருவரை இணையாக்கிக் கொள்வதற்கு ஷிர்க் என்று கூறப்படும். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸன்! நான் ஷிர்க் செய்யவில்லை. நிச்சயமாக நான் உன் மீது அன்பு கொள்கின்றேன். ஆயினும் உன் மீதான அன்பு இறைவன் மீதான அன்புடன் மோதும்போது உடனடியாக நான் உன் மீதான அன்பை விட்டு விடுகின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஏதாவது பெரும் துன்பம் ஏற்படும்போது அன்னார் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்வார்கள். يَا كهيعص اِغْفِرْ لِي காஃப்! ஹா! யா அய்ன்! ஸாத்! ஆகிய இறைவா! என்னை மன்னித்தருள்வாயாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காஃப் என்பது இறைவனின் போதுமானவன் - காஃபீ என்ற பண்பை குறிக்கிறது. ஹா என்பது இறைவன் நேர்வழி வழங்கக்கூடியவன் - ஹாதீ என்ற பண்பை குறிக்கிறது. அய்ன் என்பது இறைவன் எல்லாம் அறிந்தவன் அல்லது இறைவன் மிகவும் ஞானம் படைத்தவனாக இருக்கின்றான் - அலீம், ஆலிம் என்ற பண்பை குறிக்கிறது. மேலும் ஸாத் என்பது இறைவன் உண்மையாளன் - ஸாதிக் என்ற பண்பை குறிக்கிறது. அதாவது அல்லாஹ்வே! நீ போதுமானவனாவாய். நீ நேர்வழி வழங்கக்கூடியவனாவாய். நீ நன்கு அறிந்தவனாவாய். நீ உண்மையாளன் ஆவாய். உனது இந்த அனைத்து பண்புகளைக் கொண்டு நான் வேண்டுகின்றேன். நீ என்னை மன்னித்தருள்வாயாக என்று அல்லாஹ்விடம் அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: விரிவுரையாளர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: அன்னார் ஒரு முறை தமது ஒரு வேலைக்காரனை அழைத்தார்கள். ஆனால் அவனிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. அன்னார் மீண்டும் மீண்டும் அழைத்தார்கள். ஆயினும் அவன் எந்த பதிலும் கொடுக்கவில்லை. சிறிது நேரம் கழிந்த பிறகு அந்த பையன் தற்செயலாக அன்னாருக்கு முன்னால் தென்பட்டான். அப்போது அன்னார், மாலிக்! உனக்கு என்னவாயிற்று? நான் உன்னை எத்தனை முறை அழைத்தேன்? நீ எந்த பதிலும் தரவில்லையே? என்று கேட்டார்கள். அதற்கு அவன் கூறினான்: அசல் விஷயம்

என்னவென்றால், எனக்கு தங்களின் மென்மையின் மீது நம்பிக்கை இருந்தது. தங்களின் தண்டனையிலிருந்து நான் என்னை பாதுகாப்பு பெற்றவனாக கருதுகிறேன். எனவே தான் நான் உங்களது அழைப்பிற்கு பதில் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அந்த சிறுவனின் இந்த பதில் பிடித்து விட்டது. எனவே அன்னார் அவனை விடுதலை செய்து விட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இங்கு ஓர் உலகவாதி இருந்திருந்தால், நீ எனது மென்மையிலிருந்து ஆகுமற்ற பயன் அடைகின்றாயா? என்று கூறி அவனுக்கு தண்டனை வழங்கியிருப்பார். ஆனால் அன்னார் அவனுக்கு பரிசு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு சஹாபி விருந்திற்கு அழைத்தார். சில சஹாபிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அடங்குவார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வயது ஏனைய சஹாபாக்களோடு ஒப்பிடும்போது குறைவாக இருந்தது. எனவே சில சஹாபிகள் அன்னாருடன் நகைச்சுவை செய்ய விரும்பினார்கள். அவர்கள் பேரீத்தம் பழங்களை சாப்பிட்டு விட்டு, கொட்டைகளை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு முன்னால் வைத்துக் கொண்டிருந்தார்கள். சஹாபிகள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் நகைச்சுவையாக நீங்கள் அனைத்து பேரீத்தம் பழங்களையும் சாப்பிட்டு விட்டீர்களா? இதைப் பாருங்கள். அனைத்து கொட்டைகளும் உங்களுக்கு முன்னாலேயே கிடக்கின்றன என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இயல்பில் எரிச்சல் இருந்திருந்தால் நீங்கள் என்மீது பழி சுமத்துகின்றீர்கள். அல்லது என்மீது தப்பெண்ணம் கொள்கின்றீர்கள் என்று கூறி சஹாபிகளோடு சண்டையிட்டிருப்பார்கள். ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அது தன்னோடு செய்யப்பட்ட நகைச்சுவை என்பதை புரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், தாமும் நகைச்சுவையாக இதற்கு பதிலளிப்பதிலேயே தன்னுடைய சிறப்பு உள்ளது என்று எண்ணினார்கள். எனவே நீங்கள் அனைவரும் கொட்டைகளையும் சாப்பிட்டு விட்டீர்கள். ஆனால் நான் கொட்டைகளை வைத்து வந்தேன் என்று பதிலளித்தார்கள். சஹாபிகள் மீது அந்த நகைச்சுவை திரும்பி விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஏதாவது ஆலோசனை கேட்கும்போது அதற்கு முன்னர் தருமம் செய்து கொள்ளும்படி திருக்குர்ஆனில் கட்டளை உள்ளது. இந்த கட்டளை இறங்கிய உடன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். கொஞ்சம் தொகையை சதகாவாக முன் வைத்து, நான் சிறிது ஆலோசனை பெற விரும்புகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியாக சென்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் பேசினார்கள். தாங்கள் எந்த விஷயம் தொடர்பாக ஆலோசனை செய்தீர்கள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒரு சஹாபி கேட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எந்த குறிப்பான விஷயமும் ஆலோசனை பெறுவதற்காக இருக்கவில்லை. ஆனால் திருக்குர்ஆனின் இந்த கட்டளையின் மீது அமல் செய்துவிட வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டதாக சாட்சி பகர்கிறேன் என்று உம்முல் மூமினீன் ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எவர் அலீ அவர்களை நேசித்தாரோ அவர் என்னை நேசித்தார். எவர் என்னை நேசித்தாரோ அவர் அல்லாஹ்வை நேசித்தார். எவர் அலீயுடன் பகைமை கொண்டாரோ அவர் என்னுடன் பகைமை கொண்டார். எவர் என்னுடன் பகைமை கொண்டாரோ அவர் அல்லாஹ்வுடன் பகைமை கொண்டார்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தானியங்களை விளைவித்த மற்றும் ரூஹை படைத்த இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு இவ்வாறு உறுதிமொழி கொடுத்துள்ளார்கள். அதாவது

நம்பிக்கையாளர் மட்டுமே என் மீது அன்பு கொள்வார். நயவஞ்சகர் மட்டுமே என்னுடன் பகைமை பாராட்டுவார்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை அழைத்தார்கள். உமது உதாரணம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உதாரணமாகும். யூதர்கள் அன்னார் மீது எந்த அளவிற்கு பகைமை கொண்டார்கள் என்றால் அன்னாரின் தாயார் மீது இட்டுக் கட்டி விட்டார்கள். கிறிஸ்தவ மக்கள் அன்னாரின் நேசத்தில், அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீதான அன்பில் எந்த அளவிற்கு முன்னேறி விட்டார்கள் என்றால் அன்னாருக்கு பொருத்தமற்ற அந்தஸ்தை அன்னாருக்கு வழங்கி விட்டார்கள் என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: எச்சரிக்கை! என் தொடர்பாக இரு வகையான நபர்கள் அழிவிற்கு ஆளாவார்கள். ஒரு சாரார் எனது அன்பில் வரம்புமீறி எனக்கு பொருத்தமற்ற அந்தஸ்தை வழங்குவார்கள். மற்ற மக்கள் என் மீது பகைமை பாராட்டுவார்கள். மேலும் என் மீதான பகைமையில் என்மீது இட்டுக்கட்டி விடுவார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் எப்போது ஃபே செல்வம் (அதாவது போர் புரியாமல் கிடைக்கும் செல்வம்) வந்தாலும் அவர்கள் அதனை முழுவதுமாக பங்கிட்டு கொடுத்து விடுவார்கள். மேலும் உலகமே! செல். என்னைத்தவிர வேறு எவரையாவது சென்று ஏமாற்று என்று அன்னார் கூறி வந்தார்கள். தானும் எடுக்க மாட்டார்கள். மேலும் எந்தவொரு நெருங்கிய நண்பருக்கோ அல்லது அன்பருக்கோ அதிலிருந்து எதையும் கொடுக்கவும் மாட்டார்கள். அன்னார் கவர்னர் பொறுப்பையும் மற்றும் வேறு பொறுப்புகளையும் நேர்மையான மற்றும் நம்பிக்கையான நபர்களிடம் மட்டுமே ஒப்படைத்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு சாட்டையை ஏந்தியவாறு சந்தையில் நடந்து சென்றார்கள். மக்களுக்கு இறையச்சத்தை மேற்கொள்ளுமாறும் உண்மையான விஷயங்களைக் கூறுமாறும் சிறந்த முறையில் வியாபாரம் செய்யுமாறும் அளத்தல் நிறுத்தல் மற்றும் எடைபோடுதல் ஆகியவற்றை முழுமையாக வழங்குமாறு வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கனவை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலீ கர்ரமஹுல்லாஹு வஜ்ஜஹஹு அவர்களின் உருவமாக மாறி விட்டேன். காரிஜ்கள் - வெளியேறிய கூட்டத்தினர் எனக்கு எதிராக, எனது கிலாஃபத்திற்கு எதிராக செயல்படுகின்றனர். அப்போது நான் எனக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருப்பதை கண்டேன். அன்னார் பரிவுடனும், அன்புடனும் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: يَاعَلِى دَعْهُمْ وَاَنْصَارَهُمْ وَزِرَاعَتَهُمْ அலீயே! அவர்களிடமிருந்தும், அவர்களின் உதவியாளர்களிடமிருந்தும் அவர்களின் நிலத்திலிருந்தும் விலகியிருப்பீராக. அவர்களை விட்டு விடுவீராக. அவர்களை விட்டு முகம் திருப்பிக் கொள்வீராக.

**ஒரு முறை அமீர் முஆவியா அவர்கள் ஸரார் சவுதாயி என்பவரிடம் கூறினார்கள்: நீங்கள் எனக்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பண்புகளை கூறுங்கள். அதற்கு அமீருல் முஃமினீன் அவர்களே! என்னை மன்னித்து விடுங்கள் என்று அவர் கூறினார். எனினும் நீர் கண்டிப்பாக கூறியே ஆக வேண்டும் என்று அமீர் முஆவியா கூறினார்கள். நிலைமை இவ்வாறென்றால் பின்னர் நான் கூறுகின்றேன் கேளுங்கள் என்று ஸரார் கூறினார்.**

**இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மிகவும் தைரியசாலியாகவும், உறுதியான ஆற்றலுக்கு சொந்தக்காரராகவும் திகழ்ந்தார்கள். தீர்ப்பளிக்கக்கூடிய விஷயத்தைக் கூறுவார்கள். நீதியுடன் தீர்ப்பு வழங்குவார்கள். மேலும் அன்னார் அறிவு மற்றும் ஞானத்தின் நீரூற்றாக திகழ்ந்தார்கள். அன்னாரின் பேச்சுக்களில் நுட்பமான ஞானம் வெளிப்பட்டு வந்தது. அன்னார் உலகம் மற்றும் அதன் ஆடம்பரங்களிலிருந்து வெறுப்பை வெளிப்படுத்தி வந்தார்கள். இரவு மற்றும் அதன் தனிமையின் மீது அன்பு கொண்டிருந்தார்கள். அன்னார் மிகவும் அழகக் கூடியவராகவும்,**

**மிகவும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய மனிதராகவும் திகழ்ந்தார்கள். மிக எளிமையான ஆடை அணியக் கூடியவராகவும், சாதாரண உணவை விரும்பக் கூடியவராகவும் இருந்தார்கள். அன்னார் எங்களுக்கு மத்தியில் எங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரைப் போன்று இருந்து வந்தார்கள். நாங்கள் கேள்வி கேட்டால் அதற்கு பதிலளித்து வந்தார்கள். ஏதாவதொரு சம்பவத்தைப் பற்றி கேட்டால் எங்களுக்கு அது பற்றி கூறி வந்தார்கள்.**

**இறைவன் மீது ஆணையாக! எங்களுக்கு அன்னார் மீதும் அன்னாருக்கு எங்கள் மீதும் அன்பு மற்றும் நெருக்கத்திற்கான பெரும் தொடர்பு இருந்தது. எனினும் அன்னாரின் பெருமதிப்பின் காரணமாக நாங்கள் அவர்களுடன் குறைவாகவே பேசி வந்தோம். அன்னார் மார்க்க பற்று கொண்டவர்களை கண்ணியப்படுத்தி வந்தார்கள். ஏழைகளுக்கு தனக்கு அருகில் இடமளித்து வந்தார்கள். தனது பொய்யால் தனது கூற்றை அன்னாரை ஏற்கச் செய்து விடலாம் என்று எந்த வலிமைமிக்க நபரும் பேராசை கொள்ள முடியாது. எந்தவொரு பலவீனமான மனிதரும் அன்னாரின் நீதி, நேர்மையிலிருந்து நிராசையடைந்தது இல்லை.**

**இறைவன் மீது ஆணையாக! சில சந்தர்ப்பங்களில் நான் கண்டுள்ளேன். இரவு சூழ்ந்து விடும்போது நட்சத்திரங்களும் ஒளி இழந்து விடும்போது அன்னார் தனது தாடியைப் பிடித்து பாம்பு கடித்த மனிதன் துடிப்பதைப்போன்று துடிப்பார்கள். மேலும் மிகவும் வேதனையுற்ற நபரைப் போன்று அழுவார்கள். மேலும் உலகமே! நீ செல். என்னைத் தவிர்த்து வேறு ஒருவரை நீ ஏமாற்று என்று அன்னார் கூறுவார்கள். நீ என்னை ஏமாற்ற பார்க்கின்றாயா? எனக்கு அலங்காரமாகத் தென்படுகிறாயா? நீ என்ன விரும்புகின்றாயோ அது ஒருபோதும் நடைபெறாது. அது ஒருபோதும் நடைபெறாது. நான் மீண்டும் திரும்ப முடியாத மூன்று தலாக்குளை உனக்கு கொடுத்து விட்டேன். ஏனென்றால் உனது வயது மிகக் குறைவாகும். உனக்கு எந்த அந்தஸ்தும் இல்லை. அந்தோ! வழிப்பாதை உணவு குறைவாக உள்ளது. பயணமோ நீண்டதாகவும், வழியோ அபாயகரமானதாகவும் உள்ளது என்று கூறுவார்கள்.**

இந்த விஷயங்களைக் கேட்டு ஹஸ்ரத் முஆவியா அவர்களும் அழ ஆரம்பித்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ் அபுல் ஹஸன் மீது கருணை காட்டுவானாக. இறைவன் மீது ஆணையாக! நீர் கூறியவாரே அன்னார் இருந்தார்கள் என்று கூறியவாறு ஸராரே! அலீ அவர்களின் மரணச் செய்தி உமக்கு எவ்வாறு வேதனை அளித்தது? என்று கேட்டார்கள். அதற்கு தாயின் மடியிலேயே குழந்தை அறுக்கப்படும்போது அந்த தாய்க்கு ஏற்படும் வேதனையைப் போன்று எனக்கு வேதனை ஏற்பட்டது என்று ஸரார் அவர்கள் பதிலளித்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உண்மையைத் தேடுபவர்களின் நம்பிக்கைக்கு உகந்தவராகவும், வள்ளல்களுக்கு நிகரற்ற முன்மாதிரியாகவும் இறையடியார்களுக்கு சான்றை பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. மேலும் இவர்கள் தம் காலத்து மக்களில் சிறந்த மனிதராகவும் நாடுகளை ஒளிரச் செய்ய அல்லாஹ்வின் ஒளியாகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இறையச்சமுடையவர்களாகவும், தூய அகத்தைக் கொண்டவர்களாகவும், ரஹ்மானாகிய இறைவனிடம் மிகவும் அன்பிற்குரியவர்களாகத் திகழும் மக்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் சமுதாயத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவும் தம் காலத்தின் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார்கள். இவர்கள் ஆதிக்கம் பெற்ற இறைவனின் சிங்கமாகவும், கருணை கொண்ட இறைவனின் வீரராகவும், வள்ளல் தன்மை கொண்டவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் இருந்தார்கள்.

இவர்கள் எத்தகைய தனிச்சிறப்புமிக்க வீரராக இருந்தார்கள் எனில் போர்க்களத்தில் தமது இடத்தை விட்டு அகன்று விட மாட்டார்கள். அவர்களுக்கு எதிராக பகைவர்களின் ஒரு படையே இருந்தாலும் சரியே! இவர்கள் வாழ்நாள் முழுவதும் ஏழ்மையில் கழித்தார்கள்.

மனித குலத்தின் தூய்மைத் தரத்தின் உச்சத்தை எட்டியிருந்தார்கள். அவர்கள் மிகவும் இனிமையாகப் பேசக்கூடியவர்களாகவும் மொழிவளம் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் பேச்சு உள்ளத்தின் ஆழத்திற்குள் இறங்கி விடும். அதனால் மூளையின் துருப்பிடிப்புகள் அகன்று விடும். அடையாளங்களின் ஒளியால் அவர்களது முகம் பொலிவடைந்து திகழும்.

அவர்கள் இயலாதவர்களின் துயர் ஆற்றுவதன் பால் கவனமூட்டி வந்தார்கள். சிக்கனமான வாழ்வைக் கழிப்பவர்களுக்கும் வறிய நிலையில் உள்ளவர்களுக்கும் உணவளிக்க கட்டளை பிறப்பித்து வந்தார்கள். திருக்குர்ஆனின் ஆழமான கருத்துகளை புரிவதில் அன்னாருக்கு விஷேசமான புரிதலும் வழங்கப் பெற்றிருந்தது.

நான் விழித்திருக்கும் நிலையில் அவர்களைக் கண்டேன். நான் அவர்களை அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை படைப்பினங்களில் தகுதியானவர்களாகவும், ஒழுக்கத்தில் உறுதியானவர்களாகவும் தன்னடக்கம் மற்றும் பணிவான இயல்பை உடையவர்களாகவும், மின்னக்கூடியவர்களாகவும் ஒளிரக் கூடியவர்களாகவும் காணப் பெற்றேன். மேலும் இந்தக் கனவு விழித்திருக்கும் நிலையில் வரும் கனவுகளில் ஒன்றாக இருந்தது. எனக்கு ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியவர்களோடு ஒரு உன்னதமான தொடர்பு உள்ளது. இந்தத் தொடர்பின் உண்மைத்துவம் கிழக்கு மற்றும் மேற்கின் இறைவனைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. நான் ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் அவர்களின் இரு புதல்வர்கள் மீதும் அன்பு செலுத்துகிறேன். எவர் அவர்களோடு பகைமை கொள்வாரோ அவரோடு நான் பகைமை கொள்கிறேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இத்துடன் இங்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நிறைவு பெறுகிறது. அடுத்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் துவங்கும். இன்ஷா அல்லாஹ்.

ஜுமுஆ குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தொழுகைகளுக்குப் பிறகு 24 மணி நேரம் ஒளிபரப்பாகும் ஒரு புதிய டிவி சேனலை நான் துவக்கி வைப்பேன். இன்ஷா அல்லாஹ். அது MTA GHANA - கானா என்ற பெயரில் ஒளிபரப்பாகும். இது கானாவின் டிஜிட்டல் பிளாட்ஃபார்மில் 24 மணி நேரம் ஒளிபரப்பாகக்கூடிய புதிய தேசிய டிவி சேனல் ஆகும். சேட்டிலைட் டிஷ்ஷின் உதவியின்றி ஒரு சாதாரண ஏரியல் மூலமாகவே இந்த சேனலை பார்க்க முடியும். நான் கூறியது போன்று ஜுமுஆவிற்குப் பிறகு தொழுகைகளுக்குப் பிறகு இதனை நான் துவக்கி வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

பிறகு ஹுஸர் அவர்கள் பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியா சிறைவாசிகளுக்காக துஆ செய்யுமாறு அறிவுறுத்தியவாறு கூறினார்கள்: அல்லாஹ் குறிப்பாக அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. பாகிஸ்தானின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்குள்ள அஹ்மதிகளுக்கு நிம்மதியான வாழ்க்கையை கழிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக. இல்லையென்றால் அல்லாஹ் அவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்ளட்டுமாக! மேலும் நாம் அவர்களிடமிருந்து விரைவாக விடுதலை பெறுபவர்களாக இருப்போமாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ

وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رحمکم اللہ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ

لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)